10149

ಉದ್ಯಾನ ಸಂವಾದಃ

This book does not comes under V.S. dva...

A book on the Conversion on

the

உத்யாந ஸம்வாதம்

श्रीः

उद्यानसंवादः

काकुमानिकलाशालामधिष्ठाय विनिर्गतौ ।
विद्यार्थिनावुभौ प्राज्ञौ विवेचनविचक्षणौ ॥
उद्यानपत्रिकादौस्स्थ्यमविचार्यमनर्गलम् ।
उपपाद्य विशेषेण संभाषेते मनोहरम् ॥

ग्रन्थरत्नमिदमान्तमुदीक्ष्य प्राज्ञमण्डलमशेषमपारे ।
हर्षसागरवरे विनिमग्नं बोभवीति तदिदं बुधभाग्यम् ॥

"डीरिसिंहस्य सिंहत्वं ग्रामेपश्यन्तु पण्डिताः ।"
इत्युच्चैर्गर्जतामस्तु नित्यश्रीर्नित्यमङ्गलम् ॥

1946.

ஸ்ரீ:

உத்யாந ஸம்வாதம்

சிரோமணி மாணுக்கர்களிருவர் திருவல்லிக்கேணிக் கடற்கரைத் தோட்டமொன்றில் உல்லாஸமாக நின்று பரஸ்பரம் பேசின ஸம்பாஷணை இது.

உத்யாந ஸம்வாதமென்கிற மகுடத்திற்கு இரண்டு பொருள். உத்யானத்தில் [அதாவது, தோட்டத்தில்] நடந்த ஸம்பாஷணை என்றும், உத்யாந பத்திரிகையைப்பற்றி நடந்த ஸம்பாஷணை என்றும். ஆகவே இது இரட்டுற மொழிதல்.

வடமொழியில் தேவநாகரிலிபியில் நடந்துவருகின்ற உத்யாந மாதப்பத்திரிகையின் அஸங்கர்ப்பங்களை இரண்டு சிரோமணிகள் வெளியிடுகின்றூர்கள். மதிரேக்ஷணர்த்த விசாரத்தில் மறுவாய் திறக்கவில்லாத ஸ்ரீமத் திருக்கண்ணபுரம் ஸ்ரீநிவாஸாசாரியர் [காகுமானி கலாசாலைப் பண்டிதர்] உத்யான பத்ரிகையைச் சரணமடைந்ததுமுதல் அது செய்கிற அட்டஹாஸமும் ஆரவாரமும் முதலியன விளங்குமிதில். இதைப் பூர்த்தியாக வாசிக்கு மவர்கள் அநேக சாஸ்த்ரார்த்த ரஸ்ய ரஹஸ்யங்களை யுணர்ந்து களிக்கப் பெறுவார்கள்.

வித்வான். அனந்தாசாரியர்,
சென்னை.

உத்யாந ஸம்வாதம்

[ரங்கஸாமியும் ராமஸாமியும் பேசிக்கொள்ளுகிறார்கள்.]

ரங்.— ராமா! கையில் உத்யான பத்திரிகை போலிருக்கிறதே, இன்றுதான் வந்ததோ? ஏதேனும் விசேஷமுண்டோ? சிலமாதங்களாய் பத்ரிகை தோறும் மதிரேக்ஷணவிசாரம் ஓயாமல் வந்து கொண்டிருந்ததே, அது (19-1.) இந்தப்பத்திரிகையிலும் உண்டோ?

ராம.— இந்த விசாரம் இந்த யுகத்தில் ஓயுமதன்று என்று அன்றே நான் சொன்னேனே; அது இவ்வளவு சீக்கிரமாக ஓய்ந்து விடுமா? இப்பத்திரிகையிலும் ஏராளமாக வந்திருக்கிறது. அது இருக்கட்டும்; அதைப்பற்றி அடுத்த படியாகப் பேசுவோம். இன்னொரு விநோதம் வெளிவந்திருக்கிறது, அதைக்கேட்கிறாயா?

ரங்.— இன்று அமாவாஸ்யைதானே; இன்றைக்கும் நாளைக்கும் நமக்கென்ன கேள்வி முறை; உள்ளவிநோதங்களை யெல்லாம் உரையாய்; தாராளமாகக் கேட்கிறேன்.

ராம.— இதில் கடைசி பக்கத்தில் "பாடசுத்தி:" என்ற தலைப்பின்கீழ் பத்திராதிபர் இரண்டு பாடத்திருத்தங்கள் காட்டியிருக்கிறார். இரண்டாவது திருத்தத்தைப்பற்றின வேடிக்கையைக்கேள். ஆசார்ய ஹ்ருதயத்தில் இரண்டாவது ப்ரகரணத்தில் "ஜன்மாந்தர ஸஹஸ்ர நற்றவங்களாலே" என்கிற (99) சூர்ணையின் வியாக்கியானத்தில் அவித்யாஸ்மிதேத்யாதி ப்ரமாண மொன்று மணவாள மாமுனிகளால் உதாஹரிக்கப் பட்டிருக்கின்றது. பெரும்பாலும் தமிழ் தெலுங்கு பதிப்புகளிலெல்லாம் "அவித்யாஸ்மிதராகத்வேஷாபிநிவேசரூப..." என்றே அந்தமேற்கோள் அச்சிடப்பட்டுள்ளது. 1940ஆம் வருஷத்தில் ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியர்ஸ்வாமி வெளியிட்ட ஸ்ரீமதவரவரமுநீந்த்ரக்ரந்தமாலைப் பதிப்பில் [அதிற் சேர்ந்த ஆசார்யஹ்ருதய வியாக்கியானத்திலும், (பக்கம் 82) அதன் முடி

விலுள்ள ப்ரமாண அகராதியிலும் (பக்கம் 231)] அவித்யாஸ்மிதா ராகத்வேஷ...என்று அச்சிடப்பட்டிருக்கிறது. இதற்கு முந்தியே 1933 ஆம் வருஷத்தில் (ஸ்ரீமுகவூ) வெளியிடப்பட்டிருக்கிற ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் ஆசார்யஹ்ருதய ஸாரத்திலும் [தமிழ்லிபிப்பதிப்பில்] 77வது பக்கம் 12வது வரியில் "அவித்யாஸ்மிதா..." என்றே ப்ரமாணவடிவம் காட்டப்பட்டிருக்கிறது. இதைப் பற்றிச் சென்ற நவராத்ரி ஸதஸ்ஸில் சில பண்டிதர்கள் கூடி விசாரம் செய்தார்கள். அண்ணங்கராசார்யருடைய பதிப்புகளில் காண்கிற பாடம் புதிதாயிருக்கிறதே, அவித்யாஸ்மிதா—என்று தீர்க்கமாகவிருக்கிறதே; இதற்கு என்ன அர்த்தம்? என்று ஒருவர் கேட்டார்; அவித்யாஸ்மித— என்று ஹ்ரஸ்வமாக விருந்தால் என்ன அர்த்தமென்று ஒருவர்கேட்டார். அதன்மேல் இந்த ப்ரமாணம் எவ்விடத்திலுள்ளது? ஆகரம் கண்டு பிடித்தால் உண்மைவிளங்கும் என்று பேச்சுவந்தது. அப்போது, இது யோகஸூத்ரத்தில் ஸாதநபாதத்தில் மூன்றுவது ஸூத்ரமாகவுள்ளது. அவித்யா அஸ்மிதா...என்று பிரித்து வியாக்கியானம்செய்யப்பட்டுளது. (அஸ்மிதையாவது அஹங்கை.) ஆகவே 'அவித்யாஸ்மிதராக' என்கிறபாடம் பொருந்தாது;'அவித்யாஸ்மிதாராக...' என்கிற பாடந்தான் யுக்தம் என்று சில மஹான்கள் நிரூபித்தார்கள். இவ்வளவால் அண்ணங்கராசார்யருடைய பதிப்புகளிற்கண்ட பாடமே யுக்தமானதென்று முடிவுசெய்யப்பட்டது. அதை அரைகுறையாகக் கேள்விப்பட்ட உத்யாநபத்ராதிபர் தாம் ஏதோ பரிச்ரமப்பட்டு இப்பாடவுண்மையைக் கண்டுபிடித்து விட்டதாகக் காட்டிக்கொள்ள விரும்பி இந்த பத்ரிகையில் "அவித்யாஸ்மித—என்கிற பாடத்தை அவித்யாஸ்மிதா— என்று திருத்தவேண்டும்" என்று வெளியிட்டுள்ளார். இங்கு அண்ணங்கராசாரியரும் உண்மையான பாடத்தையறிந்து கொள்ளவில்லை யென்று மறைமுகமாகக் காட்டிச் சில பாமரர்களை வஞ்சித்திருக்கிறார். இது எனக்குப்பெரிய சிரிப்பாயிருக்கிறது.

ரங்.—மறைமுகமாகக் காட்டியிருக்கிறாரென்கிறாயே; அது என்ன? அதை எனக்கு நீ விளங்கக் கூறவேணும். உத்யானர் மறைமுகமாகக் காட்டினது போலவே நீயும் மறைமுகமாகக் காட்டிப்போனால் என்ன லாபம்?

ராம.—சென்னையில் ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபக ஸபையென்று ஒருஸபை யிருந்தது. அந்த ஸபையார் 29 வருஷங்களுக்குமுன் தெலுங்கு லிபியில் ஆசார்யஹ்ருதய வியாக்கியானமச்சிட்ட போது அதற்கு தாத்பர்ய ஸாரஸங்க்ரஹமொன்று எழுதிக் கொடுக்கும்படி ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமியை வேண்டினார்கள். அப்படியே இவரெழுதிக்கொடுத்த வதனையும் அவர்கள் அதன் முடிவில் சேர்த்து அச்சிட்டிருக்கிறார்கள். அச்சிட்டதிலும் சோதித்ததிலும் அந்த ஸபைப்பண்டிதர் ஸம்பந்தப்பட்டவரேயல்லது அண்ணங்கராசாரியர் ஸம்பந்தப்பட்டவரல்லர். அச்சுப்பிழை திருத்தினவொருவர் ஏதோ ப்ரமித்து "அவித்யாஸ்மித" என்று ஹ்ரஸ்வாந்தமாகப் பதிப்பித்திருக்கிறார். அந்த தாத்பர்ய ஸாரஸங்க்ரஹம் ஸ்ரீ அண்ணங்கராசாரியர் இயற்றியதென்று அதில் இருப்பதால் அதிலுள்ள அச்சுப்பிழை அண்ணங்கராசார்யருடைய அந்யதாஜ்ஞானத்தினாலானதென்றுஉலகுக்குக்காட்டி இதனால் ஒரு த்ருப்தியடைந்து விடலாமென்று மனப்பால் குடித்த உத்யாகபத்ராதிபர் 'அண்ணங்கராசாரியரும் தவறுதலாக உதாஹரித்திருக்கிறார்' என்று ஸ்பஷ்டமாகக்காட்டாமல் "ஆஜெ யொஜிதெ ஸாரஸங்ரஹெ வ" என்று மறைமுகமாகக் காட்டி தோஷோத்பாவனம் செய்திருக்கிறார்.

ரங்.—உத்யாக பத்திராதிபர் இவ்வளவு கேவலமான நிலைமைக்கு ஏன் வந்து விட்டார். அண்ணங்கராசாரியர் ஸ்வாமி தமிழில் ஆசார்யஹ்ருதய ஸாரம் பதிப்பித்திருப்பதும் தெலுங்கில் ஸ்ரீவரவர முநீந்த்ர க்ரந்தமாலை பதிப்பித்திருப்பதும் உலகமெல்லாம் பரவியிருக்கிறதே. இப்பதிப்புகளில் எவ்விதமான பாடம் இருக்கிறதென்று பார்த்தல்லவோ இவர் இந்த பாட சுத்தி எழுதவேண்டும்.

12 வருஷங்களுக்கு முன்பும் 6 வருஷங்களுக்கு முன்பும் வெளிவந்து எங்கும் பரவியுள்ள பதிப்புகளைவிட்டு 29 வருஷங்களுக்கு முன்பு வெளிவந்ததும் யாரோ பிறர் சோதித்ததுமான பதிப்பைப் பற்றிக்கொண்டு எதுக்கு இவர் பரிச்ரமப்படுகிறார் ?

ராம.—நீ இதைக் கேட்பது இருக்கட்டும். ஆசார்ய ஹ்ருதயத்திற்கும் இவர்க்கும் என்ன ஸம்பந்தம் ? அந்த ஸ்ரீகோசத்தை இவர் பார்க்கவாவது தொடவாவது ப்ரஸக்தியுண்டோ? அண்ணங்கராசாரியர்ஸ்வாமி பாட சோதந பரீக்ஷா என்கிற க்ரந்தத்தை வெளியிட்ட பின்பு அதற்கு நேர்முகமாக பதில் சொல்லமாட்டாத ஜடங்கள் அண்ணங்கராசாரியருடைய க்ரந்தங்களுள் எதில் என்ன தவறு கிடைக்குமென்று நோண்டிப் பார்ப்பதையே இரவும் பகலும் தொழிலாகக் கொண்டிருப்பது உலக மறிந்தது. ஆனாலும் இதில் எனக்கொரு ஸந்தோஷம்; "ஜெரவ ீ: காஸொகூயாஃகஃஸஃ" என்றாப்போலே எந்தவிதத்தினாலோ இவர்கள் அண்ணங்கராசாரியருடைய க்ரந்தங்களிலெல்லாம் கண்குத்திப்பாம்புபோல் கண்ணைச் செலுத்திப் பரிசீலனைகள் செய்வது இவர்களுக்குப் பரம ப்ரயோஜனத்தை யளிக்கக்கூடியதே. "ஊிவூயாவி ஸஂஸூெஷா உஹஜெதவஹிவாவகஃ" அன்றோ.

ரங்.—நீ சொல்லுவது பரமார்த்தமே; அண்ணங்கராசாரியருடைய க்ரந்தங்களில் தவறுகள் இருக்கின்றன வென்றே வைத்துக் கொள்வோம்; அவற்றை எடுத்துக் காட்டிவிட்டதனாலே பாடசோதந பரீக்ஷைக்கு என்ன பதில் சொன்னதாக ஆய்விடும் ? முன்னோர்களின் க்ரந்தங்களிலேயே எவ்வளவோ தவறுகள் இருக்கின்றனவென்று விமதர்கள் பரஸ்பரம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது ஆதுநிக க்ரந்தங்களில தவறுகள் ஸம்பவிப்பது அதிசயமன்றே. உண்மையான தவறுகளை எடுத்துக் காட்டினாலாவது லோகோபகாரமாக இருக்கும். உத்யாந பத்ராதிபர் காட்டும் ப்ரக்ருத பாடசுத்தி

அவருடைய அற்பத்தனத்தைக்காட்டுவதன்றிவேறன்றே. நிற்க. ஸம்ஸ்கிருத பத்ரிகையில் தமிழ் நூல்களிலிருந்து விஷய விசாரம் செய்வது எதற்காக? விஷயம் ஸம்ஸ்கிருத ப்ரமாணத்தைப்பற்றியதே யாதலால் தமிழ் நூலாயிருந்தாலென்ன? என்று சொல்லவுங்கூடும். இதுகாறும் இப்பத்ரிகையில் இப்படிப்பட்ட விசாரம் ஏதேனும் வந்ததுண்டோ?

ராம.—நான் பார்த்த வரையில் கிடையாது. சென்ற வருஷத்தில் அவரை நான் நேரில் கண்டுபேசினபோது ஒரு விஷயம் கேட்டேன். அதாவது ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனுடைய ரஹஸ்ய க்ரந்தங்களில் வேத ப்ரமாணங்களை உதாஹரிப்பதில்லையென்று ஒரு விரதம் கொள்ளப்பட்டிருக்கிறது; இதில் யார்க்கும் விப்ரதிபத்தியில்லை. ஆகவேதான் குருபரம்பரா ஸாரத்தில் "யஸ்ய தேவே பரா பக்தி:" இத்யாதி ப்ரமாணத்தை அவசியம் உதாஹரிக்க வேண்டியிருந்தும் அது ச்ருதி வாக்யமாகையாலே அதை உதாஹரியாமலே "பகவத் விஷயத்திற்போலே குரு விஷயத்திலும் பரையான பக்தியுடையவனுக்கு அபேக்ஷிதார்த்தங்களெல்லாம் ப்ரகாசிக்குமென்னுமிடம்" என்று அர்த்தாநுவாதம் மாத்திரமே செய்தருளியிருக்கிறார். இப்படி விரதம் கொள்ளப்பட்டிருக்கும்போது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் அபராத பரிஹாராதிகாரத்தின் முடிவில் "விஷ்ணும் க்ராந்தம் வாஸுதேவம் விஜாநந் விப்ரோ விப்ரத்வம் கச்சதே தத்வதர்சீ" என்கிற ச்ருதி ப்ரமாணத்தை ஸ்வாமி அப்படியே உபாதாநம் பண்ணியிருக்கிறார். வேதார்த்த ஸங்க்ரஹ வ்யாக்யானமான தாத்பர்ய தீபிகையில் ச்ருத ப்ரகாசிகாசார்யர் இந்த ப்ரமாணத்தை ஆதர்வணிக ச்ருதியென்று ஸ்பஷ்டமாகக் காட்டி உதாஹரித்திருக்கிறார். இது ஸர்வஜ்ஞான தேசிகனுக்குத் தெரியாதென்று நினைக்கவே முடியாது. இந்த ப்ரமாண வசனத்தை ஸ்வாமி ரஹஸ்ய க்ரந்தத்தில் எப்படி உதாஹரித்தருளி

ஞர். இது ப்ரக்ஷிப்தமாக விழுந்தவிட்டதா? இதைப் பற்றின விசாரத்தை உத்யாந பத்ரிகையில் வெளியிட்டு உண்மை பெறுவிக்கவேணுமென்று கூறினேன் தமிழ் க்ரந்தங்களைப்பற்றின விசாரங்களுக்கு நமது பத்ரிகையில் அவகாசம் கிடைக்காதென்றார். பத்ரிகையில் விமர்சம் செய்யாவிட்டாலும் நீர் தாமே விமர்சித்துத் தெளிவிக்க லாமேயென்று வேண்டினேன். இப்படிப்பட்ட விசாரங் களில் நான் தலையிடுவதே கிடையாதென்று வெகு கம்பீர மாக ஸாதித்துச் சென்றுவிட்டார். அவர் தாமே இப்போது இங்ஙனே ப்ரவர்த்தித்திருக்கிறார். யாவர்க் கும் தலைவிதி தவிர்க்கவொண்ணாததன்றோ. "[illegible]" என்று தேசிகன் ஸாதித்த தையும் நினைத்து அந்த பாக்யமில்லையேயென வருந்த வேண்டியதாயிருக்கிறது.

ரங்.—இது ஒரு புதிய விஷயம் இன்று என் காதில் போட்டுவிட்டாயே; "விஷ்ணும் க்ராந்தம்" இத்யாதி ப்ரமாணம் இதிஹாஸ புராணங்களில் எடுத்தாளப்பட் டிருந்தாலுங்கூட இது ச்ருதி ப்ரமாணமென்பது மறுக் கவும் மறைக்கவும் முடியாதே. யஸ்ய தேவே பரா பக்தி: என்கிற வசனம் பாஞ்சராத்ர ஸம்ஹிதையிலுமுள்ளது. ஆனாலுங்கூட அது வேதமூல ப்ரமாணஸ்தமென்று தானே ரஹஸ்ய க்ரந்தத்தில் உதாஹரிக்கப்படவில்லை. அப்படி யிருக்க விஷ்ணும் க்ராந்த மித்யாதி வசனம் மாத்திரம் எப்படி ஸ்வாமியால் உதாஹரிக்கப்பட்டது; இவ் விஷயத்தை இன்னமும் பெரியார்களிடத்தில் விசாரித்துத் தெளிவு பெற்றிருக்கிறாயா? தேசிகதிவ்யஸூக்தி வைதேசி கர்களிடத்தில் இதை நீ கேட்டதே பிசகு. அன்னவர்கள் ஸ்ரீமத் கம்பீரமான பதில் தவிர வேறு என்ன சொல்ல முடியும்? அது கிடக்கட்டும். இந்த சங்கைக்கு நான் தெளிவு பெற வேண்டுமே. இதில் உனக்குத் தெளிவு பிறந்திருந்தால் என்னையும் தெளிவித்தேயாக வேண்டும்.

ராம.—நான் தெளிவு பெறும்வில்லை ; அதைப்பற்றிப் பிறகு சொல்லுகிறேன். இப்படிப்பட்ட ஆவச்யக விஷயங்களில் கண்ணோட்ட மற்றவர் இப்போது ஆசார்ய ஹ்ருதய [வியாக்கியான] தாத்பர்ய ஸாரத்திலிருந்து வெகு அவசியம்போல பாட சுத்தி காட்டப் புகுந்திருக்கிறாரே ! இது என்ன ? உலகில் சிலர் சில பாமரர்களை வஞ்சிப்பதென்றுண்டு ; அந்த பாமர வஞ்சனையையே பரம புருஷார்த்தமாக நினைத்து அவர்கள் அட்டஹாஸங்கள் செய்வதுண்டு. இவருடைய இந்த வியாஸத்தினால் பாமர வஞ்சனைகூட ப்ராப்தமாக வழியில்லையே. வீணான அஸூயையையும் அசட்டுத்தனத்தையும் வெளியிட்டுக் கொள்வது தவிர வேறில்லையென்றே இதனால்.

ரங்.—எனிப்படி ? ஒன்றிரண்டு பாமரர்களையாவது வஞ்சிக்க முடியாதா இதனால்.

ராம.—ரங்கா ! நீ கூட இப்படி அசடாகப் பேசுகிறாயே ; பத்ரிகைகளில் வெளிவருகிற எல்லா விஷயங்களையும் எல்லோரும் கவனிக்கிறார்களென்பது கிடையாது. ஒன்றிரண்டு வரி வாசித்தவுடனே இது நமக்கு அவசியமற்ற விஷயமென்று சிலர் விட்டுப்போவதும், வேறு சிலர் அதையே ருசியோடு படிப்பதும் எங்கும் கண்டது. ப்ரக்ருத விஷயத்தில் வியாஸம் 6 வரியேயிருந்தாலும் "[illegible]" எனகிற முதல்வரியைக்கண்டவுடனே ஸஞ்சிகையைக் கீழே வைப்பவர்கள் 100ல் 99 நபர் ஆவர். மிகச்சிலர் நோக்கி வாசிக்கக்கூடும். அப்படி வாசிப்பவர்கள் "இது அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் மீது த்வஜமெடுத்திருக்கிறது" என்று எளிதாக அறிந்து கொள்வார்கள். உடனே அதை வெகு ஆஸ்தையோடு ஆராய்ச்சியும் செய்வார்கள். அண்ணங்கராசாரியர் ஸ்வாமி ஸொந்தமாகப் பரிசோதித்துத் தம் பொறுப்பில் பதிப்பித்திருக்கிற புத்தகங்களை யெடுத்துப்பாராமலிரார்கள். பார்த்தவுடனே உண்மை தெளிந்து

'சே! சே!, உத்பானம் இவ்வளவு ஹம்பக்குப்பேர்வழியா!' என்று மூக்கில் விரலைவைத்தே தீருவர்கள். ஸந்தேஹமே யில்லை. ஆக, பாமரர்களுக்கு இவ்விஷயம் தெரியப் போகிறதேயில்லை; தெரிந்துகொள்ளவல்ல பண்டிதர்கள் இவருடைய அல்பவார்த்தையினுல் ஏமாந்துபோக ப்ரஸக்தியில்லை வ்ருஷணஸ்ய வ்ருதா ச்ரமः என்ன வேண்டியது தவிர வேறில்லை.

ரங்.— ஏன்? அண்ணுஸ்வாமி 1933ல் வெளியிட்ட ஆசார்ய ஹ்ருதய ஸாரத்தையும், 1940ல் வெளியிட்ட ஆசார்ய ஹ்ருதய வியாக்கியானத்தையும் பாராதவர்கள் சிலர் இருக்கக்கூடாதா? அப்படிப்பட்டவர்கள் ஏமாந்து போகக் கூடாதா? ஸர்வாத்மநா இது வ்ருஷணஸ்ய வ்ருதா ச்ரமமாகுமா?

ராம.— உனக்கு மேற்பட்ட அசடு இல்லையென்ன வேணும். எந்தப் பதிப்பில் ஓரெழுத்துப் பிழையுள்ளதென்று இப்போது உத்யானம் காட்டுகிறதோ, அந்தப் பதிப்பு இப்போது துர்லபம். 1933லும் 1940லும் வெளி வந்த பதிப்புகளே உலகம் முழுவதும் பரவி ஆங்காங்குக் காலக்ஷேபபரர்களுக்கு உணவாயிருந்து வருகிறது. ஒவ்வொருவரும் இவற்றையே யெடுத்துப் பார்க்க நேரும். பார்த்தவுடனே 'எதுக்கு இந்த கூபகூர்மம் இப்படிக் கொக்கரிக்கிறது!' என்று சொல்லியே தீருவர்கள். இது கிடக்கட்டும். வேறுவிஷயம் ஏதாவது பேசுவோம்.

ரங்.— கோபம் வேண்டாம்; ஒரே ஒருவார்த்தை. உத்யாநபத்ராதிபர் அண்ணு ஸ்வாமியால் 1933 லும் 1940 லும் பதிப்பிக்கப்பட்ட ஸ்ரீகோசங்களுள்ளனவென்று தெரிந்து கொள்ளாமல் லௌகிக புத்தியுடன் இந்தப் பாடசுத்தியை வெளியிட்டதாகக் கொள்ளலாகாதா? நஹி ஸர்வஸ் ஸர்வம் ஜாநாதி என்கிற நியாயப்படி எல்லாரும் எல்லாப்பதிப்புகளையும் பார்த்தேயிருக்கவேணு மென்கிற நிர்ப்பந்தமில்லையன்றோ.

ராம:— வாஸ்தவம்; இதுவும் ஸம்பாவிதமே. ஆனால், இந்த உத்யானர் உலகத்தில் அச்சிட்ட புத்தகங்களெல்லாம் திருப்பதி காலேஜ் புஸ்தக பாண்டாரத்தில் சேகரிக்கப்பட்டிருப்பதாகவும், ப்ராப்தமாகிற விஷய விசாரங்களுக்கு ஸம்பந்தப்பட்ட வரையில் எல்லாப் பதிப்புகளையும் தாம் பரிசீலனை செய்து போருவதாகவும் ஒரு அபிநயம் காட்டுகிறார். மதிரேக்ஷண விசாரத்தில் "ஜீர்ணோ ஜீர்த்வம் ஜர:" என்று நிகண்டு இருப்பதாக மஹான்கள் சொன்னால், இதுவரை அச்சாகி வெளிவந்திருக்கிற கோசங்களில் இது கிடைவே கிடையாதென்று ஸர்வத்ரஷ்டாம்போல ஆரவாரிக்கிறார். நமது நாட்டில் அச்சாகித் திருமாளிகைதோறும் திகழ்கின்ற ஸ்ரீகோசங்களையே அறியகில்லாத இவர் எதுக்கு வீண் செருக்குக்கொள்ளுகிறாரென்று விவேகிகள் நினைக்க ப்ராப்தமன்றோ. இந்த பரிபவத்தைப்பெறுவிப்பதற்காகவே யன்றோ எம்பெருமான் இப்போது இவர் மூலமாய் இப்பாட சுததியை வெளியிடுவித்தது. உண்மையாக இவர் பாடசுத்தியைத் தாமாக ஆராய்ந்து கண்டு பிடித்து வெளியிடுகிறவராயிருந்தால் இப்போது இவர் கைக்கொண்ட ஆசார்யஹ்ருதயப் பதிப்பிலேயே ப்ரமாண வசனங்களில் பலதவறுகள் உண்டே; அவற்றைத் திருத்திக்காட்ட வேண்டியது மிகவும் முக்கியமாயிற்றே. ஒன்று கேள்; "அர்சாவதாரோபாதாந வைஷ்ணவோத்பத்தி சிந்தநம் மாத்ருயோநிபரீக்ஷாயாஸ் துல்யமாஹுர் மநீஷிண:" என்கிற ப்ரமாணம் ப்ரஸித்தமானது. அர்ச்சாவதாரத்தின் உபாதாந த்ரவ்யமென்ன பாகவதர்களின் ஜாதியென்ன இவற்றை யாராயப்புகுவது மாத்ருயோநிபரீக்ஷையோடொக்குமென்கிறது இந்த ச்லோகத்தினால். அர்த்தம் இப்படியிருக்க, எங்குமுள்ள காலக்ஷேபபரர்கள் "அர்சாவதாரோபாதாநம் வைஷ்ணவோத்பத்தி சிந்தநம்" என்று இரண்டு பதமாக்கிச் சொல்லி வருகிறார்கள். அச்சுப்பதிப்புகளிலும் இப்படியே பாடம் விழுந்திருக்கிறது. தற்போது இவர் கைக்கொண்ட ஆசாரயஹ்ருதய வியாக்கி

யானப் பதிப்பிலும் [பக்கம் 165ல்] இந்த அசுத்த பாடமே விழுந்திருக்கிறது. இதுபோல் பலவுண்டு. அவற்றை இவர் சிறிதேனும் தொட்டிருக்கிறாரோ? சென்ற நவராத்ரி ஸதஸ்ஸில் வந்த திருத்த ப்ரஸ்தாவத்தில் அவையும் வந்திருந்து இவர்காதில் விழுந்திருந்தால் அவற்றையும் கம்பீரமாக வெளியிட்டிருப்பார்.

ரங்.— இப்போது இவர் இரண்டு பாடசுத்திகள் வெளியிட்டிருப்பதாகச் சொன்னாயே; ஒன்று தெரிந்தது; மற்றொன்று என்ன? அதுவாவது லோகோபகாரகமாக இருக்குமோ?

ராம.— லோகோபகாரம்செய்ய இவர் பிறந்தவரல்லரே; அப்படிப்பட்ட திருத்தம் இவரால் எங்ஙனம் வெளிவரும்? ஏதோ பத்ரிகாவகாச பூரணம் செய்தாகவேண்டுமே; இவர் வெளியிடுகிற திருத்தமெல்லாம் இவர்க்குப் பரிபவத்தையே நிலைநாட்டி முடிகின்றன. பழைய விஷயமொன்றுமிகமுக்கியமானது, நீ அவசியம் தெரிந்துகொள்ளவேண்டியதிருக்கின்றது; மறவாமல் பிறகு ஞாபகப்படுத்தினால் அதைச்சொல்லுகிறேன்; ப்ரக்ருதம்கேட்டதற்குச் சொல்லுகிறேன்கேள். ஈட்டின் ஜீயரரும்பதவுரையில் (1–1–1ல்) "ஆத்மா ஸம்ரக்ஷித: ஸிம்ஹை: வ்ருத்திமாச்ரித்ய வைதஸீம்" என்கிற ரகுவம்ச (4–35.) ச்லோகத்தின் பிற்பாதி உதாஹரிக்கப்பட்டுளதாம். இதில் **ஸிம்ஹை:** என்றிருப்பது பிசகு என்றும், **ஸுஹ்மை:** என்றிருக்கவேணுமென்றும், ஸுஹ்ம தேசத்து அரசர்களென்று பொருளென்றும், பாடத்தைத் திருத்திக்கொள்ளவேணுமென்றும் உத்யாகர் எழுதியுள்ளார். மதுரையிலிருந்து பலவாண்டுகள் வெளிவந்து கொண்டிருந்த ஹரிஸமய திவாகர பத்திரிகையில் எட்டையாபுரம் ஸம்ஸ்தாநவித்வானொருவர் இதைப்பற்றி 17 வருஷங்களுக்கு முன்பு ஒரு ஆராய்ச்சி யெழுதி வெளியிட்டிருக்கிறார். அதை அப்படியே திருப்புறம்பயம் இராமசாமி நாயுடு அவர்கள்

ஒருப்ரமாணத்திரட்டுநூலில் எடுத்துக்காட்டியுள்ள விஷய மென்ன வென்றால், ரகுவம்சப் பதிப்புகளில் ஸுஹ்மை: என்று பாடம் காண்கிறபடியால் அதுதான் ஸரியான பாடமென்று நம்பிக்கையுள்ளவர்கள் ஈட்டு அரும்பதவுரையிலும் அப்படியே பாடம் கொள்ளலாம். அந்த தேசத்தின் பெயர் ஸுஹ்மமே, ஸிம்ஹமன்று என்று திண்ணமாக நிர்ணயிப்பதற்குரிய பிரமாணம் கிடைக்கும் வரையில் ஸுஹ்மை: என்று திருத்தவேண்டிய அவசியமில்லை-என்பதே. அதை இந்த உத்யானர் பார்த்தவரென்றே நினைக்கிறேன். ஸிம்ஹை: என்றிருக்கக்கூடாதென்பதற்கு இவர் ஏதாவது ப்ரபல ப்ரமாணம் காட்டியிருந்தால் நன்றாம். காளிதாஸ - மல்லிநாதர்களுடைய கையெழுத்துக்காப்பி நமக்குக்கிடைத்திலது. ஸிம்ஹை: என்றிருந்த பாடத்தை ஸுஹ்மை: என்று பின்புள்ளார் அச்சிட்டுவிட்டார்களென்று ஒருவர் சொன்னால் அதைமறுக்க ப்ரபல ஸாமக்ரி வேண்டும். பெரிய திருமொழியில் (6–6–3.) *கவ்வை மாகளிறுந்தி விண்ணி யேற்ற * என்றும் அதற்கடுத்த பாசுரத்தில் * வெங்கண்மாகளிறுந்தி விண்ணியேற்ற* என்றும் எங்கும் ஸ்வாமிகள் ஸேவித்து வருகிறார்கள்; புத்தகங்களிற் பாடமுமிதுவே; ஆனாலும் வெண்ணி யென்று ஓர் ஊரின் பெயர் என்றும், விண்ணியென்பதைத் திருத்தி வெண்ணி யென்றே ஓத வேணுமென்றும் சிலர் கூறுகின்றார்கள். 'அது ஒரு ஊரின் பெயரென்பதை யாரும் மறுக்கவில்லை; விண்ணியென்பது ஊரின் பெயராக இருந்ததென்று கொள்ளக் குறையென்ன? எதற்காகத் திருத்தவேண்டும்' என்று பிரதிவாதம் செய்வாருமுளர். அதுவே ரீதிதான் இங்கும். ஸிம்ஹை: என்பதற்கு 'சிங்கங்களாலே' என்று யாரும் பொருள் கூறப்போவதாகிறதில்லை; 'ஸிம்ஹதேசத்தவர்களாலே' என்றுதான் யாவருமிசையும் பொருள். தேசத்தின் பெயர் திரிந்து வழங்குவதுமெங்குமுண்டு. மலையாளத்தில் திருவாறன் விளையென்று ஒரு திவ்விய தேசம் நம்மாழ்வார் பாடுகிறார். அவ்வூருக்கு உலகர்வழக்கு நெடுநாளாகவே 'ஆரம்முளை' என்று

தானுள்ளது. திருவித்துவக்கோடு என்று குலசேகராழ்வார் பாடினதலம் திருமிற்றக்கோடு என்றே அநாதியாக நாளைக்கும் வழங்கப்பட்டுவருகிறது. திருவல்லவாழென்று பாடல்பெற்ற தலம் திருவல்லாய் என்றே வழங்கப்பட்டு வருகிறது. திருக்கோவலூரை திருக்கோயிலூரென்றே ஸகலரும் வழங்கிவருகிறார்கள். திருவெவ்வுளூரைத் திருவள்ளூரென்றும், திருநின்றவூரைத் தின்னனூரென்றும், சோளஸிம்ஹபுரத்தைச் சோளங்கிபுரமென்றும் வழங்குகிறார்கள். இப்படி பதினாயிரம் காட்டலாம். இவற்றைக்கொண்டு முன்னோர் மொழிகளை மாற்றவோ திருத்தவோ ஒருவருமே துணியார். நாம் இளமையில் ரகுவம்சம் வாசிக்கும்போது ஸாஹ்மை: என்றே வாசித்திருக்கிறோமாதலால் இப்பாடமே நன்றென்று நாமும் நினைக்கக்கூடியதே. ஆனால் ஸிம்ஹமென்றே தேசநாமமிருந்தாலென்ன? அப்படியும் காண்கிறதே என்று ஒருவர் கேட்டுவிட்டால் பரீக்ஷிக்கவேண்டியதுதான். இப்படிப்பட்ட விவாதங்கள் அநாதி நிதந ஸந்தர்ப்பமான வேதத்திலுமன்றோ புகுந்துள்ளன. சில அக்ஷரங்களிலும் பதங்களிலும் இப்படியா அப்படியா என்கிற விவாதமும், சிலவாக்யங்களில் இங்கே நிறுத்துவதா அங்கே நிறுத்துவதா என்கிற விவாதமும் போன்ற பல விவாதங்கள் வேதத்திலும் எங்காட்டிலுமுண்டே. அவரவர்கள் தம் தமக்குகந்த பாடப்படியன்றோ ஓதி வருகிறார்கள். சிலர் (ஸாஹ்மை:) என்றும், சிலர் (ஸிம்ஹை:) என்றும் பாடம் கொண்டிருந்தால் இதை மறுக்க யாராலாகும். இன்றியமையாத திருத்தங்கள் எத்தனையோ உண்டு. ஸிம்ஹை: கூடாது, ஸாஹ்மை: என்று திருத்தவேணுமென்று இது என்ன திருத்தம். இந்த உத்யாக பத்திரிகையில் ஆரம்பம் முதல் நாளது வரையில் தலைமேல் "ஸ்ரீ ஸ்ரீ விஜயதே" என்று பதிப்பிக்கப்பட்டு வருகிறது; இதில் விஜயத என்பதை விஜயதே என்று திருத்தினால் நன்றாயிருக்குமென்று ஒருவர் உபதேசித்தால் இவர் திருத்திக்கொள்ள ஸஜ்ஜரோ?

ரங்.— இன்று நான் அகத்திலிருந்து புறப்படும் போது சிறந்த சகுனமாயிற்று; அதற்கேற்றபடி உன் வாயினால் பல அபூர்வ விஷயங்கள் உணரப்பெற்றேன். வெகு ஆனந்தமாயிருக்கிறது. மறவாமல் பிறகு ஞாபகப் படுத்த வேணுமென்று சற்று முன்னே சொன்னாயே; அது என்ன விஷயம்?

ராம.— அதுதான் முதல் விஷயம். இவர் உத்யாந பத்ரிகை ஆரம்பித்தபோது நாலாவது ஸஞ்சிகையில் முதன் முதலாகவொரு பாட சுத்தி வெளியிட்டார். அதாவது, “ஶ்ரீவாநஜாஸ்ராஜ்யே” என்கிற ரகுவம்ச (4–2) ச்லோகத்தின் மல்லிநாத விபாக்கியானத்தில் “ஸமவெக்ஷெஸ்யா யிகஸ்ஸந்தாவொஸஹித்ரய:” என்று ஒரு வாக்யமிருப்பதாகக் கண்டு விட்டு இது தவறான பாடமென்றும் ஸமவர்ஷ்யாயிக:... என்றிருக்க வேண்டுமென்றும் கொண்டு இந்த அல்ப விஷயத்தை மிகப்பெரிய விஷயமாக்கி ஒரு வியாஸம் வெளியிட்டிருந்தார். இதைக்கண்ட அண்ணாஸ்வாமி அப்போது தாம் நடத்தி வந்த மஞ்ஜுபாஷிணீ பத்ரிகையில் ப்ரபவஹூ தைமீ 14உ வெளிவந்த பகுதியில் [Vol 28-35ல்] இந்த உத்யானர் மறுவாய் திறக்க இடமில்லாதபடி நீண்ட வியாஸமொன்று எழுதி வெளியிட்டிருந்தார். பிறகு 1930ஆம் வருஷத்தில் வெளி வந்த வேதாத்யயந ஸர்வஸ்வ மென்கிற அண்ணாஸ்வாமியின் க்ரந்தத்தின் மீது திருக்குடந்தையார் விவாதப்பட்டு ஏதோ எழுதினபோது இந்த உத்யாநர் தமக்கு வேதத்திலும் ப்ரவேசமுண்டுபோலக் காட்டிக்கொள்ள விரும்பி ஆகாச தாண்டவமாகச் சில எழுதினார். அப்போதும் இவர்க்கு வ்யதிகரணஜ்ஞாநமேயல்லது ஸமாநாதிகரணஜ் ஞான மடியோடில்லையே யென்று பலரும் வருந்தும்படி ஸர்வஸ்வரக்ஷா என்கிற க்ரந்தத்தில் 64 முதல் 72 வரையிலுள்ள பக்கங்களில் இவருடைய ஜ்ஞாந ஸாம்ராஜ்யம் விசதீகரிக்கப்பட்டிருக்கின்றது.

ரங்.— பூர்வேவொஶநாஷஸு பஹு என்று மாரீசனைப்பற்றிச் சொன்னது நினைவுக்கு வருகிறதே. வேதலக்ஷணவிசாரச் சண்டை விஷயம் கிடக்கட்டும்; ரகுவம்ச வியாக்கியானத்தில் திருத்தம்காட்டித் தலைகுனிந்து நின்றாரென்கிறாயே, இதைப்பற்றித்தான் தெளிவாகத் தெரிந்து கொள்ள எனக்கு விருப்பம். இந்த உத்யாகர் நெடுநாளாகவே சில்லரை விஷயங்களில் தான் வாய்வைப்பவர் போலிருக்கிறதே. ஐயோ பாவம்! ஏனிப்படி? *க்ரூராநயஸ்தோஸ்தூத: கெசித் க்ரூரஸ்ஸாஸ்து த்ருக்ஷவேதே* என்றதற்கு இவரே முதன்மையான இலக்கியம் போலிருக்கிறதே; கிடக்கட்டும். பூர்வேப்யோऽதிகஸ்ஸந்தாப: என்கிற அந்த விஷயத்தில் அண்ணாஸ்வாமி என்ன எழுதியிருக்கிறார்; அதைச்சொல்லாய்.

ராம.— 18 வருஷங்களுக்கு முன்புபோன விஷயத்தை இன்று கேட்கவிரும்புகிறாய். நன்று. மஞ்ஜுபாஷிணியில் அண்ணாஸ்வாமி வெளியிட்டிருக்கும் வியாஸத்தையே வாசித்துவிடுகிறேன், கேளாய்;—

“ पूर्वेभ्योऽधिकस्संतापः ।

उद्यानपत्रिकायां विद्यार्थि संभाषणात्मकः कश्चन लेखः प्रकाश्यते । अयं हि विद्यार्थिनां मनो विनोदयतीव । चतुर्थ्यां सञ्चिकायां 'दिलीपानन्तरं राज्ये... इति रघुवंशश्लोकमुपादाय विद्यार्थिनावुभौ संभाषेते इति किमपि प्रकाशित मनुवाच्यते । प्रकृतश्लोकव्याख्यायां 'पूर्वेभ्योऽधिकस्संतापोऽभूदित्यर्थः' इतीदं किमपि वाक्यं केषुचिन्मुद्रितपुस्तकेषु पठ्यत इत्युपक्षिप्य प्रस्तूयते । एकतरो विद्यार्थी पृच्छति-पूर्वेभ्य इति...केते पूर्वे? जानासिवा? इति । अन्यतरः प्रतिवक्ति-नाहं जानामि, त्वत्त एव श्रोतु मिच्छामि इति । अथ प्रष्टा प्रतिवदति-अहमपि न जानामि अन्योऽपि कश्चिन्न जानाति । अय-

मपपाठ इति मे गुरुराह । पूर्वाभ्यधिकस्संताप इति किल तत्र पठितव्यम् इति। (இதுவரையில் உக்யானத்தின் விணாரவாரம் அநுவதிக்கப்பட்டது. இனிமேல் அண்ணாஸ்வாமியின் பதிலுரையைக் கேள்.) अत्रेदमस्माकं विवक्षितम्। नानादेशेषु नानाविधैरक्षरैर्मुद्रापितमस्ति रघुवंशकाव्यं सव्याख्यम् । बहव आदर्शा इदानीमस्माभिः पर्यैक्षिषत । पूर्वादप्यधिकस्संताप इति पाठः केषुचित्पुस्तके ष्वत्रदृश्यते । पूर्वाभ्यधिकस्संताप इति पाठोऽपि केषुचित् । पूर्वेभ्योऽधिकस्संताप इति एकस्मिन् । अपपाठ इति योऽयमुदाहृतः स काचित्कः । तादृशं पाठ मुपादाय विस्तरेण प्रपञ्चनं लेखनस्य नतावदावश्यकम् । अथास्त्वावश्यकम् । अपपाठ इति न्यक्करणीयोऽपि न भवति स इति मन्येरन् मनीषिणः । पूर्वेभ्य इत्युक्ते के ते पूर्वे ? इत्युक्तस्युषः प्रश्नस्य किं नु दुर्वचमुत्तरम ? सुवचमेव ननु । दिलीपे राज्यं शासति सति राज्ञां हृदयेषु असकृदुत्पन्नाः खलु संतापाः । [न केवलं सकृत् ।] त एव संतापाः पूर्वेभ्य इत्यत्र पूर्वपद विवक्षिता भवितु मर्हन्ति । तेभ्योऽभ्यधिक इदानीन्तनस्संताप इत्यभिधीयते । कास्विदत्रानुपपत्तिः ? क ते पूर्वे ? इति प्रश्नमुत्थाप्य 'अहमपि न जानामि, अन्योऽपि कश्चिन्न जानाति' इति प्रतिवचन प्रकाशनं कुतोनु ? पूर्वेभ्य इत्युक्ते पूर्वकालिकेभ्यो मनुष्येभ्य इत्यर्थ एव प्रतीयत इति प्रतिपद्यमानाः प्रतिपादयन्तश्च महान्तोऽत्र प्रष्टव्याः—किंभोः पूर्वपदस्य पूर्वकालिकचेतनवस्तुष्वेव नियता शक्तिरिति । 'पूर्वाणि दुःखानि पुनःपुनर्मे' इत्यादयः प्रयोगाः प्रथन्त एव ननु । तथा च, पूर्वेभ्यः—पूर्वकालिकेभ्य स्संतापेभ्यः अधिकस्संतापः—अतिशयितस्संताप , अभूत्—रघुप्रतिष्ठापन श्रवणादजायत—इत्येवमर्थवर्णनं नखलुदुष्यति । पूर्वाभ्यधिक इत्युदाह्रियमाणे सुपाठत्वेनाभिमते पाठेऽपि अयमेवास्त्यर्थः प्रतीयते । समस्तप्रयोग एवायमर्थः प्रतीयेत, न तथा व्यस्त प्रयोगे इति किं

शापः? अथ बहुवचनमनावश्यक मित्याशयो वा? नानावश्यकम् नाप्यावश्यकं तत्। 'नमोऽचिन्त्याद्भुताक्लिष्ट ज्ञानवैराग्यराशये' इत्यत्र ज्ञानपदं वैराग्यपदं च एकवचनान्तत्वेन बहुवचनान्तत्वेन च यथा व्याचक्षते व्याख्यातारो वेदान्तदेशिकादयस्तथेहापि न हि न युज्यते। ....सर्वथाप्यसंबद्धेषु पाठेषु परस्सहस्रेषु जाग्रत्सु तत्रतत्र, अतथाविधस्यास्य दूषणे महान्तं परिकरमाबध्य अधिकमवकाशं वृथाव्यययतिस्म स्वल्पावकाशाऽप्युद्यानपत्रिकेति भृशमवसीदामः। कुलिङ्गशकुनिन्यायेन मञ्जुभाषिण्या अप्यवकाश एवं व्यर्थीकृतोऽभूदस्माभिरिति च दूयामहे। पाठशोधन कुतूहल मुपचीयता मावश्यकतमेषु विषये षूद्यानपत्रिकाया इत्याशंसमान उपरमति-श्री वैष्णवदासः॥'

ரங்.— பேஷ், நல்லபோடு போட்டிருக்கிறது. அப்போதிருந்தே இந்தப் பேர்வழிக்கு...... கொஞ்சம்......

ராம.— ஸர்வஸ்வஸ்யஹித: என்கிற விஷயத்தில் ஆரம்ப பாகையால் தக்க்ரதுந்யாயம்போல் பலித்திருக்கிறது காண்:, ஸர்வஸ்வஸ்யஹித: க்ஷயாய நா உதித:.

ரங்.— ஸரி; இப்போது மதிரேக்ஷணவிசாரம் என்ன நிலைமையிலிருக்கிறது? வைதிகமனோஹராவில் கடைசியாக இதுபற்றி எழுதியிருந்தது பார்த்திருக்கிறேன்; காஞ்சீபுரியில் ஸந்நிதி வீதியிலெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் தண்ட்ரி. பட்டப்பா தாதாசாரியர் ஸ்வாமியபடத்தில் அவருடைய குமாரரோடும் அரசாணிபாலை வாரதிஸ்வாமியின் குமாரரோடும் தாம் சாகுந்தல நாடகம் வாசிக்கும்போது அந்த பட்டப்பாஸ்வாமி ஶிரோரத்நவஜ்ஞ: என்கிற நிகண்டுவைக்கொண்டும் மற்றும் உபபத்திகளைக்கொண்டும் ப்ரவசனம் செய்த அர்த்தத்தையே தாம் வெளியிட்டதாகவும், அக்காலத்தில் காஞ்சியிலிருந்த பல வித்வான்

கள் இந்த அர்த்தத்தில் அதிசங்கைகொண்டு ஆக்ஷேபித்த தாகவும் அப்போது பட்டப்பாஸ்வாமியும் வாரதிஸ்வாமியும் தாளகோச நிகண்டுவைக்காட்டித் தெளிவிக்க எல்லாரும் ஸுப்ரஸந்நர்களானதாகவும் கீர்த்திமூர்த்தி ஸ்ரீமத் திருப்புட்குழிஸ்வாமியும் இவ்வர்த்தமே ஸாதித்து வந்த தாகவும், நாளைக்கும் காஞ்சியில் பதினாறுகால் மண்டப வாசலில் விளங்கிக்கொண்டிருக்கின்ற பட்டப்பாஸ்வாமி குமாரரையும் வாரதிஸ்வாமி குமாரரையும் விசாரித்து இவ்வுண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டியதென்றும் உத்யாக பத்திரிகையில் வெகுநாளாக வெளியிடப்பட்டு வருகிற [பட்டப்பாஸ்வாமி பணித்த] ஸுபாஷித நீவீ வியாக்கியானத்திலும் இவ்வர்த்தம் ஏறியிருக்கின்ற தென்றும் இங்ஙனே பல விஷயங்களை அண்ணாஸ்வாமி எழுதியிருந்தாரே; அதற்குமேல் உத்யானர் என்ன செய் திருக்கிறார். காஞ்சீபுரம் சென்றோ கடிதமெழுதியோ அந்த இரண்டு ஸாக்ஷிகளையும் விசாரித்தாரா? வாரதி ஸ்வாமி குமாரரிடமிருக்கிற நிகண்டுக்களையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்தாரா? தெளிவு பெற்றாரா? அல்லது இந்த வரலாறெல்லாம் கல்பித மென்கிறாரா? எவ்வித மாகத் தாண்டவமாடுகிறார்?

ராம.— அந்த வரலாற்றைப் பொய்யென்று ஸஹஸா எழுதிவிட இவராலாகுமோ? ஸாக்ஷிகளாகக் குறிப்பிடப் பெற்ற இரண்டு மஹான்களும் தங்கள் திருத்தகப்பனார் களுடைய உபதேசத்தில் மிக்க அன்பு பூண்டவர்களாய் விளங்குகின்றார்களே. பட்டப்பா ஸ்வாமியிடமிருந்த தெலுங்குலிபி சாகுந்தல புஸ்தகத்தில் "உஷூரலக்ஷண வஹூஹாஹி:" என்ற விடத்து வியாக்கியானத்தில் [மார்ஜனில்] ஒரு மூலையில் உஷூரோஉத்ருவஹூ நஉதிகொமூா நஹி ஹூா நாஷிஉ விவரீதவ்ராவ்ரா நஓ என்று அவருடைய திருக்கையால் எழுதப்பட்டிருப்பதும் விளங்குவதாகச் சொல்லுகிறார்களே. உத்யானர் அதையெல்லாம் நன்கு

விசாரித்துத் தெரிந்துகொண்டார் போலும்; ஆகவே அதை மறுக்கமாட்டாமல் "தத்தஸ்யேதி ம்ருஹீ:" என்று இன்று எழுதுகிறார். அவ்வளவோடு கைகூப்பி நின்றால் கௌரவமாயிருக்குமே; உடனே எழுதுகிறார்.— "ஸுயோதநே: வ்யவஸிதவாந் வ்யாஸஸிதஸ்ய உபயத: ஹோராநுஸ்ருத்யோவஜிஹ்தஸ்யாக." என்று.

ரங்க.—இவ்விஷயத்தில் முதலிலிருந்து அண்ணாஸ்வாமி என்ன எழுதிவருகிறாரென்பதை இடையில் வந்து புகுந்த இவர் இன்னமுமா அறியவில்லை? "இது நானாகக்கண்டு பிடித்த அர்த்தமன்று; பஹுச்ருதரான உபாத்யாயரிடம் கேட்ட அர்த்தம்" என்று அடிக்கடி எழுதியிருப்பது ஏன் இவர் கண்ணில் படவில்லையோ? மொத்தமாக உபாத்யாயரிடம் கேட்டதென்றால்போராது; பட்டப்பாதாதாசார்யரிடம் கேட்டதென்று எழுதியிருக்கவேணுமென்கிறாரோ? அப்போதே இவர் விசதமாகக் கேட்டுத் தெரிந்துகொள்ளக்கூடாதோ? உள்ள விஷயத்தை எப்போது தெரிவித்தாலென்ன? விபீஷண சரணாகதி ப்ரகரணத்தில் "ஸுஹ்ருத்காம்ய ஸம்ப்ராப்த:" என்றதற்கு "ஸர்வஷு ஹ்ருத: காம்ய" என்பதன்றோ மறுமொழி. இந்த வரலாற்றை முன்னமே யெழுதியிருந்தால் "உபயத: ஹோராநுஸ்ருத்யோவஜிஹ்தஸ்யாக" என்கிறீரே; மஹத்தான ச்ரமத்தை ஏற்றுக்கொள்ள இவரை யார் அழைத்தது?

ராம.—ஏன் அப்படி சொல்லுகிறாய்? யாருமழைக்காமலா வந்தாரிவர்? தலைவிதி யழைத்துத் தான் வந்து தடுமாறி நிற்கிறார். வ்ருஷணஸ்ய வ்ருதா ச்ரம: என்றும் அதற்கு அந்த சிரமம் அவர்ஜநீயந்தானே. பக்ஷி விசேஷத்திற்கு வாசகமாக மதிரா என்று ஸ்த்ரீ லிங்க பதந்தான் சப்தஸ்தோமமஹாநிதி சப்த கல்பத்ருமாதி கோசங்களில் காண்கிறது என்பதையும் அண்ணாஸ்வாமி தாமே முதல் வியாஸத்திலேயே எழுதியுள்ளார். விசாக

பட்டணம் மஹாமஹோபாத்யாய பரவஸ்து ரங்காசார்யருடைய பேரன் தமக்கு ஏதோ தெரிவித்ததாக எழுதுகிறார். அந்த ரங்காசார்யர் எழுதியுள்ள கோசத்தின் வைகரி எப்படிப்பட்டதென்பதை அச்சாகி வெளிவந்திருக்கிற பகுதியிலிருந்தே நன்கறியலாம். எந்த விஷயம் எந்த இடத்தில் எழுதப்பட்டிருக்குமென்பதைக் கூட தெளியமாட்டாதவர்கள் அதைப் பார்த்ததும்பொய்; ஏதோ எழுதினதாகத் தெரிவிப்பதும் பொய். இதெல்லாம் ஊமையரோடு செவிடர் வார்த்தை. காகாஸுர வ்ருத்தாந்தம் சித்ரகூடத்தில் நடந்ததென்று கேள்விப்பட்ட ஒருவர் "அயோத்யா காண்டத்தை ஆயிரந்தடவை புரட்டிப் பார்த்தேன்; இந்தக் கதை ஸ்ரீராமாயணத்திலேயே கிடையாது; அதிலிருப்பதாகச் சொல்லுவது முழுப்பொய்" என்றாராம்.

ரங்.—அதெல்லாம் இருக்கட்டும். இவருடைய ஞானம் எவ்வளவு? எதையாவது ஆழ்ந்து ஆராய்ந்து கண்டு பிடிக்க வல்லவர்தானே? உத்யாந பத்ரிகையை நீ தவறாமல் பார்த்துவருகிறாயே, உள்ளபடி நீ இவர் திறத்து க்ரஹித்திருப்பதைச் சொல்வாய்.

ராம.—அவகாசமிருந்து கேட்பதானால் ஆயிரம் விஷயம் எடுத்துரைப்பேன் இவரைப்பற்றி. பானைச் சோற்றுக்கு ஓரவிழ்தானே பதம் பார்ப்பது. இப்போது கையிலிருக்கிற உத்யான பத்ரிகையிலிருந்தே சிலவிஷயம் தெரிவிக்கிறேன்; இதுகொண்டே நீ நன்கு தெளிந்து கொள்ளலாம். நீ மாத்திரமன்று; பண்டித வுலகம் முழுதுமே தெளியலாம். பட்டப்பா ஸ்வாமி பணித்த ஸுபாஷித நீவீ வ்யாக்யானம் இன்சுவையே வடிவெடுத்தது; அதை அச்சிட்டு வருகிற இவர் ரஸாபாஸப் படுத்திப் பாழாக்கி வருவது வாசாமகோசரம். இன்று வெளிவந்த பத்ரிகையில் (19–1.) இரண்டே பக்கம் அது வெளி வந்திருக்கிறது. அதில் முதல் பக்கத்தில் (அதாவது

59 ஆம் பேஜில்) பதினோராவது வரியை நீயே வாசித்துப் பார்; இதிலுள்ள ரஸ பங்கத்தை நீயே கண்டறிந்து எனக்குச் சொல்லவேணும்.

ரங்.—(அந்த பத்ரிகையை வாங்கி வாசிக்கிறான். "ஸ்வார்த்தயா ஹ்ருதஸ்வார்த்தயா ச விஷ்ணோ நயோ: விநேத்ரா:" என்ற பங்க்தியை வாசித்தவுடனே) சே!சே! இந்தப் பேர்வழி இவ்வளவு மோசமா? நான்கூட இது வரையில் ஏதோ ப்ரமித்திருந்தேன். ஸ்வார்த்தயா ஹ்ருதஸ்வார்த்தயா ச விஷ்ணோ நயோ:" என்று வாக்கியமிருக்கத்தகுமா என்று தோன்றவில்லையே இவர்க்கு. உடனே "தௌவஸதீவ ஹ்ருஷௌ" என்றிருக்கிறதே; அதைக் கொண்டாவது (விஷ்ணோ நயோ:) என்று தெளியலாமே. இவ்வளவு நுனிப்புல் பேர் வழியா இவர்!

ராம.—அச்சுப் பிழையாக விழுந்துவிட்டதென்று சொன்னால்,

ரங்.—அச்சாவது பிழையாவது; வாயைத் திறக்க முடியுமா? இந்த ஸுபாஷித நீவீவியாக்கியானத்தின் மாத்ருகை க்ரந்த லிபியிலுள்ளது. க்ரந்தத்தில் (வி) (வி) இரண்டும் அனேகமாய் ஒன்றுபோலத்தென்படும். இங்கு எந்த எழுத்து இருக்கவேணுமென்பதை ஸாதாரண வ்யுத்பந்நர்கூட எளிதில் அறிய முடியுமே. இப்படி பட்டப் பகலில் கோட்டைவிடுகிறவர் வேறுயாருமிருக்க முடியாது. இங்கு **विद्यमानयोः** என்று இராமல் **लिद्यमानयोः** என்றோ **पिद्यमानयोः** என்றோ விழுந்திருந்தால் அச்சுப் பிழையென்று சொல்லியுய்யலாம். இதை அச்சுப்பிழை யென்றால் சிரிப்பார்கள்.

ராம.—இங்கு விஜ்ரோநயோ: என்று தான் மாத்ரு கையிலிருக்கிறது என்றோ, இப்படித்தான் இருக்கவேண்டு மென்றோ பேச முற்படுவரிவர். இதுவே இவருடைய இயல்பு. வலையப்பேட்டை ஸ்வாமி வ்பதிசரணமென்றே இவர்க்கு முடிசூட்டிப் போனார். ரங்கா! இன்னமும் கேளாய். இதே பத்ரிகையில் குவலயாநந்த வியாக்யான மும் தாம் சோதித்து வெளியிட்டு வருகிறார்; அதில் பண்ணி வருகிற சித்ரவதம் சொல்லிமுடியாது. இப்போது கையிலிருக்கிற பத்ரிகையிலிருந்தே சில சொல்லுகிறேன் கேளாய். இதில் அத் ஒரு பாரம் வெளிவந்திருக்கிறது; அதில் 6வது பக்கத்தில் [அதாவது 146வது பேஜில்] "கதியஜெக ஜாமயதி ஜெவதாழ" என்கிற யாதவாப் யுதய ஸ்ரீஸூக்தி உதாஹரிக்கப்படுகிறது. அதன் கீழே யிருக்கிற வியாக்கியானத்தைச் சிறிது வாசித்துப்பார்; "உஹபத: ஜெவதாயத: வஜ்வெத-ந (வஜ)ஹஜஹதி" என்று இவர் அச்சிட்டிருக்கிறார். இங்கே (ந) என்பது எப்படி பொருந்துமென்று இவர் ஆலோசிக்கமாட்டிற் றிலர். தெலுங்கு லிபி மாத்ருகையைப்பார்த்து இவர் எழுதினார் போலும். தெலுங்கில் நகார ஸகாரங்கள் ஸ்வல்பபேதத்தோடு காணப்படும். ஸ்ருக்ஷ்ஸ என்று இருந்திருக்கும்; இதை ஸ்ருக்ஷ்ஸ என்று வாசித்து விட்டார். மேலே கூஙகூஜோகல என்று தொடங்கி ஐதி ஶாவ: என்றிருக்கிற வாக்கியமும் இவரை ஏதோ மருளச் செய்துவிட்டது. வஜ்வெத என்பதற்கு ஹஜஹதி என்று அர்த்தமல்ல என்று வ்யாக்யாநகாரர் சொல்லுவதாக நினைத்தும் ஸகாரத்தை நகாரமாக மயங்கியும் (நஹஜஹ)தி என்று போட்டுவிட்டார். ஷஷ்டீ ச்ருதிவாக்யத்தில் வஜவ வெத என்றிருப்பதால் இந்த வயாக்யாந கர்த்தா வஜஹஜஹதி என்று உரைக்க அவசியமாயிற்று. இதை யுணராமல் உத்யானப் (வஜ) என்பதை அவசியமற்றது

போல் நினைத்து குண்டலீகரணமிட்டதும் மருள். தவிர மேல் எட்டாவது வரியில்பார். ஸுவொாநுதாவஸ்ாம் ஐதி ஹ்ரஸ்வ: என்று வ்யாக்யாதா வியாகரணம் காட்டியுள்ளார். இதனல் அவர் மூலத்தில் க்ஷிதிஹுடுதெ தவ ஸமெஷ்வ தகா வயம் என்று பாடம் கொண்டிருக்கிருரென்பதை லகு கௌமுதி வாசித்தவனும் எளிதிலுணர்வன். இவர் ஸமெஷ்வதகா: என்று மெஷகாரத்தோடு மூலம் பதிப்பித் திருக்கிருர். வியாக்கியானத்திற்குச் சேரவன்றே மூலம் பதிப்பிக்கவேணும். "வ்யாக்யாநகாரர் இங்கு ஏதோ ப்ரமித்து எழுதிவிட்டார்; அதற்கு நாமென்ன செய்வது' என்பரிவர். அப்படியே யிருக்கட்டும். மூலத்திற்கு ஒரு புட்நோட்டாவது கொடுக்க வேண்டாமா? இந்த வாக்யத்தின் முன்னே "நநு தஹி-கா தாவஷஸ்ாகம் நிஜஶெஷ்வ தா" என்ற வாக்யத்தின் உண்மையை க்ரஹிக்கமாட்டாமல் குண்டலீகரணம் பண்ணி ஸந்தேஹக்குறி போட்டு அகாரப்ரச்லேஷமொன்றைச் சேர்த்து என்னென்னவோ பண்ணியிருக்கிருர். இப்படியாக எடுத்துவிட்டால் இவரது ஞானச்சாயம் வெள்ளமிட்டோடும். இப்படிப்பட்டவிவர் மதிரேக்ஷண விசாரத்தில் தலையிட்டதுமல்லாமல் "ஸுஹும் காரஸாஷு ஐஹுஸ" என்று ஏதோ தலைகாலில்லாமல் எழுதுகிருர். எந்த சாஸ்த்ரம் சிறிது? எல்லாம் மஹத்தே. அதனல் இவர்க்கு என்னுயிற்று.

ரங் — அதியஜேத நிஜாம் என்கிற யாதவாப்யுதய ச்லோகத்தில் ஸமெஷ்வதகா: என்கிற பாடமே இதுவரையில் நானும் சிந்தனை செய்திருந்தது; இப்போது புதரஞ்ஜநீ வ்யாக்யாநகாரர் ஸமெஷ்வதகா: என்று பாடம் காட்டியிருக்கிருரென்பதைக் கேட்டபின்பு என்னுள்ளம் மிகவும் பூரிக்கிறது. அப்பய தீக்ஷிதர் ஸமெஷ்வதகா: என்கிற பாடத்தைத்தான் கொண்டிருக்கிருரென்பதில் ஐயமில்லை. இங்கு (குவலயாநந்தத்தில்) தைவதம் என்று ஸ்பஷ்டமாகவே போட்டிருக்கிருர். புதரஞ்ஜநீகாரர் இதை

க்ரஹிக்கமாட்டாதவரல்லர்; க்ரஹித்தே தீக்ஷிதரிடத்தில் குறை கண்டார்; யதிராஜ ஸப்ததியில் க்ஷாம ஹ்ரு ஹவிவக்ஷணா: என்றவிடத்தில் அர்த்த ஸ்வாரஸ்ய மறியாமல் அக்ஷராநு ப்ராஸத்தில் மாத்திரமே நோக்காக (க்ஷமஹ்ருஹ) என்று திருத்தின தீக்ஷிதர் பிறகு அர்த்த ஸ்வாரஸ்யம் கெட்டதறிந்து நைந்துபோனாரென்பது ப்ரஸித்தம். அவர் இங்கும...ஹ்ரூதேவ ஸதேவ...என்று தைகாரத்திற்கும் தேகாரத்திற்கும் ப்ராஸம் கண்டார்; [illegible] இந்த ச்லோகம் ‘யோ வை ஸ்வாம் தேவதாமதியஜதே’ என்கிற வேதவாக்கியத்தைக்கொண்டே அவதரித்தது. அந்த ச்ருதியில் ஒரு தடவைக்கு இரு தடவையாக தேவதா சப்தமே யுள்ளதன்றி தைவத சப்தமில்லை; ச்லோக மருளிச்செய்பவரோ* பண்டை நான்மறை மௌலிபடிந்த வேதாந்த வாசிரியன். அவர் ச்ருதியிலிருக்கிற தேவதா சப்தத்தை விட்டு தைவதசப்தத்தைக் கொள்ளமாட்டாரென்று புதரஞ்ஜநீகாரர் ஏதோ ஆசார்யகடாக்ஷ விசேஷத்தால் அறியப் பெற்று மிகவழகிய அந்த பாடத்தைக் கொண்டு அதற்கு வியாகரணமும் காட்டினார். இந்தரஸம் உத்யானத்துக்குத் தெரிய என்ன ப்ரஸக்தி? தெரிந்தால் மூலத்தை ஸதைவதகா: என்று அச்சிடுமா? தீக்ஷிதர்க்குச் சார்பாக அப்படி அச்சிட நேர்ந்தாலும் ரஞ்ஜநீகாரர் காட்டிய ரஸத்தை விளங்கக்காட்டி டிப்பணியொன்று எழுதியிருக்கவேண்டுமே. பாடசுத்தி: என்றுமுதன்மையாக இதற்கன்றோ வெளியிட்டிருக்கவேண்டும்.

ராம.— ரஸத்தை முன்னம் தாம் க்ரஹித்தாலன்றோ பிறர்க்கு எடுத்துக்காட்ட முடியும். ஏற்கெனவேயுள்ள குவலயாநந்தப்பதிப்புகளில் [நிர்ணயஸாகர பிரஸ்பதிப்பு உட்பட] எல்லாவற்றிலும் பல பங்க்திகளில் அச்சுப்பிழைகள் புகுந்திருக்கின்றன. அவை திருத்தப்படவேண்டியிருந்தும் இதிலும் அவையே புகுந்துவருகின்றன. அவைதல்லாம் எப்படியாவது தொலையட்டும். இங்கு தேசிக திவ்ய ஸ்ரீஸூக்தியில் பொருத்தமான பாடத்தை ஒருவர் எடுத்

துக்காட்டியிருந்தும் அந்த ரஸத்தை க்ரஹிக்கமாட்டாத விவர் மதிரார்த்த விசாரத்தில் வீணாகத் தலையிட்டுக் கொண்டு தணறி நிற்பது எனக்குப்பரிதாபமாயிருக்கிறது!

ரங்.— அடிக்கடி என்னை அசடென்கிறாய்; உன் அசட்டுத்தனம் உனக்குத் தெரியவில்லை. மதிரார்த்தவிசாரத்தில் வீணாகத் தலையிட்டுக்கொண்டாரென்கிறாய். ஒருகாலும் வீணன்று. எவ்வளவோ சரக்குகள் வெளியாகவேண்டியிருக்கிறதே. இது பரமப்ரயோஜநமாக உனக்கு ஏன் தோன்றவில்லை? இன்னமும் எவ்வளவு சரக்குகள் வெளியாகப்போகிறது பார்?

ராம.— இது எனக்குத் தெரிந்ததே. பண்டிதவுலகின் பாக்யமே பாக்யம். ரஸிகவித்வான்களுக்கு நல்லுணவு எவ்வளவு கிடைத்தாலும் விசேஷந்தானே...... 'ஸ்வாத்⁴யாயாந்மா ப்ரமத:' என்று ஒரு உபதேசம் பண்ணுகிறது உத்யானம். ஹயக்ரீவோபாஸநியாயிருந்து கொண்டு தான் பெற்றிருக்கிற ஸ்ரீ போதுமே. தன் வாயினால் பிறர்க்கு ஆசாஸிக்கவும் வேணுமோ? [தேஷாம் தேஜோவிசேஷேண] தேஜோ விசேஷம் எங்கெங்கிருக்கிறதென்பது இதற்கென்ன தெரியும்? இது ப்ரக்ருதம் தன்னுடைய வியாஸத்தை * ஸஹஸ்ர[illegible]வேதிதா: [illegible] * என்று முடித்திருக்கிறது. இந்த ஆசம்ஸை கைகண்ட பலனாக முடிந்தது தனக்கு. இப்படி ஆசம்ஸித்து ஸௌக்யமும் பெறுவார் வேறு யாரேனுமுளரோ?...... ரங்கா! வெகுநேரமாயிற்று. நான் போய் வருகிறேன். நாளை மறுநாளில் திருமலைக்குப்போய்வரவேணுமென்றிருக்கிறேன். மறுபடியும் உன்னைப்பார்க்கும்போது இன்னமும் பலபல சரக்குகளுடன் பார்க்கிறேன்.

ஶ்ரீமதே [illegible]நாய.

உத்யாந ஸம்வாதத்தின் முதற்பகுதி முற்றிற்று.

Thompson & Co., Ltd., Madras—P.I.C. Q-h MS. 15,